| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.சா.சேதுராம வர்மா, | அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள், |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | (புதுச்சேரி மற்றும் காரைக்கால் நீங்கலாக) |
| சென்னை – 600 006. | |

ந.க.எண்.005124 /டி(1) /2024 நாள் : 25.06.2024

ஐயா / அம்மையீர்,

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சரின் திறனாய்வுத் தேர்வு, ஜூலை 2024 – மாணவர்களின் விவரங்களை – ஆன்லைனில் பதிவேற்றம் செய்தல் – **கால அவகாசம் நீட்டித்தல்** –தொடர்பாக.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 19.06.2024

*****

பார்வையில் காணும் இவ்வலுவலகக் கடிதத்தில், 21.07.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ள "தமிழ்நாடு முதலமைச்சரின்திறனாய்வுத் தேர்விற்கு" விண்ணப்பிக்க விரும்பும் **தமிழ்நாட்டில் மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் கல்வியாண்டில் அரசுப்பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பயின்று 2024-2025 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களின்** விவரங்களை சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் வழியாக **21.06.2024** பிற்பகல் முதல் **26.06.2024** வரை பதிவேற்றம் செய்திட கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது இக்கால அவகாசம் **03.07.2024** வரை நீட்டிக்கப்படுகிறது என்ற விவரத்தினை தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்து அதிக எண்ணிக்கையுள்ள மாணவர்கள் விண்ணப்பித்திட தலைமையாசிரியர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

<u>நகல்.</u>

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
(தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது)